# வேண்டும் வேண்டல்!

வாசிக்க: ஆதியாகமம் 18:22-33

***"எல்லா மனிதருக்காகவும் இறைவனிடம் வேண்டுங்கள்; பரிந்துபேசுங்கள்; நன்றிசெலுத்துங்கள்" (1 தீமோ 2:1)***

புதிய ஏற்பாட்டுச் சபையில் குருக்கள், குருக்களல்லாதோர் என இரு வகுப்பினர் இல்லை. நாம் அனைவரும் ஒரே உடலில் பல உறுப்புகள். சம முக்கியத்துவம்; ஆனால் பல்வேறு கடமைகள். கடவுளுக்குமுன் ஆசாரியராயிருத்தல் அரும் சிலாக்கியம் மட்டுமல்ல, பெரும் பொறுப்புமாகும். இவ்வூழியத்தை நிறைவேற்றுதலில் முக்கிய பகுதி மக்களுக்காய்ப் பிரார்த்தித்தலே.

முதலாவது, நாம் எல்லா மனிதரின் மீட்பிற்காகவும் வேண்டுதல் செய்யவேண்டும். அது நம்முடைய மீட்பராகிய கடவுளுக்கு முன்பாக நல்லதும் பிரியமுமாயிருக்கிறது... எல்லா மனிதரும் மீட்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் விருப்பமுள்ளவராயிருக்கிறார் (2 தீமோ 2:1,3,4). நமது ஜெபங்கள் எல்லா மனிதரையும் சூழவேண்டும். ரோமர் 10:14இல் பவுல் "பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?" என்று கேட்கிறார். 1 தீமோ 2:1,3,4இன் அடிப்படையில் "அவர்களுக்காய் விண்ணப்பிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி மீட்கப்படுவார்கள்" என்று கேட்கலாமல்லவா?

அடுத்து, தேவ மக்களது எழுப்புதலுக்காகவும் சீர்திருத்தத்திற்காகவும் வேண்டுதல் செய்யவேண்டும். இன்றையச் சபை அன்றையச் சபை அல்ல. இன்றையச் சபை இருக்கவேண்டியபடி இல்லை. முந்தின மகிமையை இழந்து பின்வாங்கிப் போயிருக்கிறோம். பெரும்பான்மையான சபைகளின் நிலை இதுவே. வெளிப்படுத்தலின் ஏழு சபைகளில் ஐந்து சபைகள் ஆண்டவரால் கண்டிக்கப்பட்டன. நம் நிலையும் அதுதானே? தன் ஆண்டவரை இழந்ததையே அறியாமல் சபை என்னவோ இயங்கிக்கொண்டிருக்கிறது! "நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?" (சங் 85:6). கடைசிகாலத் தீர்க்கதரிசி யோவேல் ஆண்டவரது ஆசாரியரைப் புலம்பி ஜெபிக்க அழைக்கிறான் (யோவேல் 1:13; 2:17). நோயுற்ற சபை செத்துக்கொண்டிருக்கும் உலகைக் காப்பாற்ற முடியுமோ? நமது அனுதின ஜெபப்பட்டியலில் எழுப்புதல் முதல் குறிப்பாயிருக்கட்டும்.

மூன்றாவது, நமக்குத் தெரிந்த விசுவாசிகளுக்காய் விண்ணப்பிக்கவேண்டும். அது உள்ளூர்ச் சபை அல்லது ஜெபக்குழுவின் உறுப்பினராயிருக்கலாம். ஒருவருக்காக ஒருவர் ஜெபியுங்கள் என்கிறது வேதம் (யாக் 5:16). கடமைக்காய்க் கை குலுக்கி வந்தனம் சொல்வது போதாது; சகவிசுவாசிகளுக்காய்க் கிரமமாய் வேண்டுதல் செய்வது அவசியம். நாம் தனித்தவர்களல்ல, சார்ந்தவர்கள். எனக்கு என் ஜெபம் போதும் என்று எண்ணக்கூடாது. ஒருவரின் ஜெபம் மற்றவருக்குத் தேவை. தம்மோடு விழித்திருந்து விண்ணப்பிக்க இயேசுவே தம் சீடரைக் கோரினார். தன்னோடு ஜெபத்தில் போராடும்படி பவுல் சகவிசுவாசிகளை மன்றாடிக் கேட்டான். கர்த்தருடைய ஜெபம் "எனக்கு" என்றிராமல், முழுவதும் "எங்களுக்கு" என்றிருப்பது எத்தனை கருத்தானது!

*உற்றார் பெற்றாரும் குடும்பங்களும் மற்றும் பலர் மாள்வதைக் கண்டு*
*சகித்திடா தென்றும் ஜெபித்திடும் கண்ணீர் ஜெபம் கேளுமே!*

*—சகோதரி சாராள் நவரோஜி*